Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .

## வேத ஆராய்ச்சி பாடங்கள்

ஆவிக்குரிய வளர்ச்சி

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: ஏ-4, டேஜு ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )

வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும்
என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்

அல்லேலூயா,
கர்த்தருக்குப் பயந்து,
அவருடைய கட்டளைகளில்
மிகவும் பிரியமாயிருக்கிற
மனுஷன் பாக்கியவான்
– சங்கீதம் 112:1



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue,
Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road,
Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

தனிப்பிரதி ரூ 20/= ஆகஸ்ட் 2011
VOL . 5 ISSUE . 1




## நீதியின் சூரியன்

# துன்மார்க்கமாய் நடந்தால்

நிஜா சென்னை



துன்மார்க்கர் யார்? தேவனில்லாத வாழ்க்கையை வாழுகிறவர்களே துன்மார்க்கர். தேவன் இருக்கிறார் என்கிற எண்ணமே அவர்களுக்கு இருக்காது. கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள், மேலும் பெரிய பாவங்கள் செய்பவர்கள் மட்டும்தான் துன்மார்க்கர் என்று அநேகர் நினைக்கிறார்கள். **நியாயஞ்செய்ய மனதில்லாதிருக்கிறவர்களும், பொல்லாப்பை செய்ய விரும்பும் மனதையுடையவர்களும் இரக்கமில்லாமல் இருப்பவர்களும் துன்மார்க்கர்தான்** (நீதிமொழிகள் 21:7,10,29). துன்மார்க்கன் தேவ பயமில்லாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பான். அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமும் வஞ்சகமுமுள்ளது. புத்தியாய் நடந்துகொள்வதையும், நன்மை செய்வதையும் விட்டுவிட்டான் அக்கிரமத்தை யோசிக்கிறான். நல்லதல்லாத வழியிலே நிலைக்கிறான். பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான். பாவத்தை விரும்புகிறான் (சங்கீதம் 36:1-4). **அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது. அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு** (சங்கீதம் 10:7). துன்மார்க்கன் பெருமை நிறைந்தவன். சிறுமைப்பட்டவனைத் துன்பப்படுத்துகிறான். நீதிமானுக்கு கண்ணிகளை வைக்கிறான். நீதிமானுக்கு விரோதமாக தீங்கு நினைக்கிறான். தன் திட்டங்களில் பெருமை பாராட்டுகிறான். பேராசைப்படுகிறான். மற்றவர்களை வஞ்சிக்கிறான். பிறருக்கு எதிராக சதி செய்கிறான் (சங்கீதம் 10). வன்முறையில் ஈடுபட்டு, சட்டத்தை மீறுகிறான். தீயொழுக்கமுள்ளவனாக இருக்கிறான். துன்மார்க்கனுடைய வழிகள் கேடுள்ளவைகள். தேவனைத் தேடமாட்டான். அவனது மனது குற்ற உணர்வினால் உறுத்திக் கொண்டேயிருக்கும். எப்பொழுதும் குழப்பத்தோடு, நிம்மதியில்லாமல் இருப்பான். துன்மார்க்கர் அவர்கள் செய்த பாவத்தினால் எப்பொழுதும் துன்பத்திலேயே இருப்பார்கள். **துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்** (நீதிமொழிகள் 24:16). **கர்த்தர் துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்** (சங்கீதம் 147:6).

## நீதியும் நியாயமுள்ள தேவன்

நம் தேவனுடைய குணாதிசயங்களில் ஒன்று நீதி செய்வது. அவர் நீதியின் சூரியன், நீதியும், நியாயமுள்ள தேவன். நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப் பண்ணுகிறவர். **அவர் சர்வலோக நியாயாதிபதி** (ஆதியாகமம் 18:25). தேவனுடைய குணங்கள் நம்மில் காணப்படவேண்டும். அனுதினமும், அன்றாட வாழ்க்கையிலும், நம் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளிலும், அவருடைய குணங்கள் நம்மிலிருந்து வெளிப்படவேண்டும். நம்முடைய பேச்சுகளில், நம் செயல்களில், நம் பார்வையில், நாம் செய்யும் வேலைகளில், செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் வெளிப்பட வேண்டும். நம் தேவனைப்போல நாமும், நீதியும், நியாயமுள்ளவர்களாக இருக்கவேண்டும். **நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும், நீதியைச் செய்கிறவர்களும், பாக்கியவான்கள்** (சங்கீதம் 106:3). **துஷ்டர் நியாயத்தை அறியார்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையும் அறிவார்கள்** (நீதிமொழிகள் 28:5). தீய ஜனங்கள் நேர்மையைப் பற்றி புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆனால், கர்த்தரை நேசித்து, வேத வார்த்தையின்படி நடப்பவர்கள், மற்றவர்களிடம் நேர்மையாய் நடந்து கொள்வார்கள். மற்றவர்களை நியாயமான முறையில் நடத்துவார்கள். பிறருக்கு நியாயஞ் செய்வதில் அக்கரையுள்ளவர்களாயிருப்பார்கள். பிறர் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டு, கஷ்டப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள். பிறருடைய வாழ்க்கையில் நடக்கும் அநியாயங்களை பார்த்துக்கொண்டு சும்மா இருப்பவர்களிடத்தில் தேவன் இல்லை. அவர் திக்கற்ற பிள்ளைகளின் தகப்பனும், விதவைகளை நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார். மற்றவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தும் பார்க்காததைப்போல, உதவி செய்யாமல் இருந்தோமென்றால் நாம் சுயநலத்தோடிருக்கிறோம்.

வேலை பார்க்கும் இடத்திலும், வியாபாரத்திலும், வீட்டிலும், நியாயமற்ற முறையில் நடத்தப்படுகிறீர்களா? உங்களுக்குரியதை நியாயமின்றி மற்றவர்கள் எடுத்துக் கொண்டார்களா? நியாயத்தைப் புரட்டுகிறார்களா? கவலைப்படாதிருங்கள். கர்த்தர் நிச்சயமாக உங்களுக்கு நியாயஞ் செய்வார். துன்மார்க்கன் நியாயஞ்செய்ய மனதில்லாதிருக்கிறபடியால் அவர்கள் பாழ்க்கடிக்கப்பட்டுப் போவார்கள் (நீதிமொழிகள் 21:7) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது. துன்மார்க்கர் மற்றவர்களை ஏமாற்ற முயற்சி செய்வதனாலும், சரியானவற்றைச் செய்ய மறுப்பதினாலும் அவர்களின் செயல்களே அவர்களை அழித்துவிடும்.

பிரியமானவர்களே, கஷ்டப்படுகிற ஏழை, எளிய ஜனங்களின் நியாயத்தை, புரட்டாதிருப்போம். அவர்களுக்காக தேவனே யுத்தம் செய்வார். தேவ கோபத்திற்கு ஆளாகாதிருப்போம். வேலை செய்பவர்களுக்கு வேலைக்கேற்ற நியாயமான கூலியை வேலை முடித்தவுடனே கொடுத்துவிட வேண்டும். அப்படி கொடுக்கவில்லையென்றால் அவர்கள் தேவனை நோக்கி ஜெபிக்கும்போது, அது பாவமாயிருக்கும். நாம் எந்த விதத்திலாவது மற்றவர்களிடம் நியாயமற்று நடந்து கொண்டோமா? அநியாயமாய் நடப்பவர்களிடம் சேர்ந்துகொண்டு அவர்களுடைய தீய ஆலோசனைக்கு உடன்பட்டு, தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்கிறோமா? கர்த்தரை அறிந்த யூதாவின் ராஜாவாகிய யோசபாத் துன்மார்க்கனாய் நடந்த இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப்போடே சேர்ந்து ராமோத்தில் யுத்தத்திற்கு சென்றான். யுத்தத்திற்கு செல்ல வேண்டாம் என்று தேவன் எச்சரிக்கை கொடுத்தும், தேவனுடைய வார்த்தையை அசட்டை



செய்து, ஆகாப்போடுகூட சென்றான். யுத்தத்தில் ஆகாப் மரித்துப்போனான்.

யோசபாத்தை எதிரிகள் கொல்ல வந்தபோது, கர்த்தரை நோக்கி அவன் கூப்பிட்டபோது, கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்து ஜனங்களை சிலைகளை வணங்கும்படி செய்தான். அவனது மனைவி யேசபேலின் தெய்வமான பாகால் வணக்கத்தையும் கொண்டு வந்தான். சிலைவழிபாட்டு தோப்பையும், உண்டாக்கினான். (1 இராஜாக்கள் 16:33). கர்த்தருக்கு விரோதமான பாவங்களை செய்து வந்தான். கர்த்தரின் தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்தினான். துன்மார்க்கனின் முடிவோ அழிவு என்ற வேதவார்த்தையின்படி ஆகாப் மரித்து போனான். யேசபேல், அநியாயமாக சட்டங்களை இயற்றி நாபோத்தை கொன்று போட்டு, அவன் பிதாக்களின் சுதந்திரமான திராட்சைத் தோட்டத்தை அபகரித்து, அதை ஆகாப் எடுத்துக் கொள்ளும்படி செய்தாள். பொல்லாப்பானதைச் செய்ய யேசபேல், ஆகாபைத் தூண்டிவிட்டாள்



(1 இராஜாக்கள் 21:25). யேசபேலின் உடலை நாய்கள் தின்றது. அவர்களது மகனும் மரித்து போனான். துன்மார்க்கருக்கு நல்முடிவு இல்லை.

பிரியமானவர்களே, நியாயமற்ற காரியங்களை செய்யாதீர்கள், நீதியும் நியாயமில்லாத, காரியங்களைச் செய்யும், துன்மார்க்கரோடு சேராதேயுங்கள். கர்த்தருக்கு பிரியமாக, நேர்மையானவற்றை செய்யும்போது, கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார். நியாயமற்ற முறையில் மற்றவர்களுக்கு வரவேண்டிய பணத்தையோ, பொருட்களையோ, சொத்துக்களையோ, பதவியையோ வேலையையோ எடுத்துக் கொள்ளாதீர்கள். அப்படி நேர்மையில்லாமல் மற்றவர்களுக்கு அநியாயம் செய்பவர்கள் துன்மார்க்கர்கள். நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். துன்மார்க்கனுடைய சுபாவம் நம்மில் இருக்கிறதா? அப்படியிருந்தால், இன்றே மனந்திரும்புவோம். இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்பு கேட்கும்போது, அவர் தம்முடைய இரத்தத்தினால் நம்மை கழுவி சுத்திகரித்து பரிசுத்தப்படுத்தி விடுகிறார். நாம் குற்றமற்றவர்களாக மாறிவிடுவோம்.

**இரக்கமுள்ளவர்**

நம் தேவனுடைய இன்னொரு குணாதிசயங்களில் ஒன்று இரக்கம். **அவர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்** (சங்கீதம் 86:15). தேவனிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறைவரைக்கும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் தக்கதாக நமக்கு தண்டனை கொடுக்காமல், கிருபையாய் மனமிரங்கி நம்மை மன்னித்தார். அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம்பல் 3:22). இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானானுக்கு பிரயாணம் பண்ணும்போது, அநேக தடவை தேவனிடமிருந்து விலகிச் சென்று அவருக்கு விரோதமாக பாவஞ்செய்தார்கள். அவர்கள், பாவத்தை உணர்ந்து மனந்திரும்பியபோது, அவர்களுக்கு மனமிரங்கி அவர்கள் பாவங்களை மன்னித்தார். நாம் செய்த பாவங்களுக்காக, அவர் கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார்.



நம்மேல் இரக்கமுள்ளவராயிருக்கிறார். நாம் நம் தேவனைப்போல இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும். கஷ்டப்படுகிற, தேவையிலிருக்கிறவர்களுக்கு இரங்கி உதவி செய்வோம்.நம் மனதை கடினப்படுத்தாதிருப்போம். **துன்மார்க்கனுடைய மனம் பொல்லாப்பைச் செய்ய விரும்பும்; அவன் கண்களில் அயலானுக்கு இரக்கங்கிடையாது** (நீதிமொழிகள் 21:10). துன்மார்க்கர்கள், தீயகாரியங்களைச் செய்ய மிகுதியான ஆசையும், அதை அடையவும் விரும்பி, அதைப்பெற முயற்சி செய்துகொண்டிருப்பார்கள். தன்னைச் சுற்றி இருப்பவர்களின்மீது இரக்கங்காட்டமாட்டார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத்தேயு 5:7). மற்றவர்களுக்கு இரங்குகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு இரக்கம் காட்டப்படும். இரக்க குணமுள்ளவர்களிடத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமிருக்கும். நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம். நாம் ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்யாமல், நம் இருதயத்தை அடைத்துக் கொண்டோமானால், கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பதற்கு நாமே தடையாகி விடுகிறோம். **சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிடுப்பார்** (சங்கீதம் 41:1). ஏழைகளை நினைவில் வைத்து, அவர்களுக்கு ஏற்றவேளையில் உதவி செய்பவர்கள், சந்தோஷமாக, மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படுமளவிற்கு செல்வஞ் செழிப்புடன் இருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் தொல்லைகள் வரும்போது கர்த்தர் அவர்களை மீட்டுக்கொள்வார்.

உண்மையாய் கர்த்தரை நேசிப்பவர்கள் கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்வார்கள். தாராள மனதோடு செய்வார்கள். **அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக, அவனுக்குக் கொடுக்கும் போது, உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக, அதினிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக்கிரியையிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்** (உபாகமம் 15:10). நாம் மற்றவர்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நடிக்காமல், உண்மையாக அன்பு செலுத்த வேண்டும். தீயவர்களோ நடிப்பார்கள். **துன்மார்க்கனுடைய இரக்கமும் கொடுமையே** (நீதிமொழிகள் 12:10). துன்மார்க்கன் இரக்கமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். நல்லவர்கள்போல பேசுவார்கள். ஆனால், உள்ளத்தில் கெட்ட செயல்களுக்கான திட்டங்களை மறைத்து வைத்திருப்பார்கள். **நீதியைச் செய்யாமலும், தன் சகோதரனிடத்தில் அன்புகூராமலும், இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல** (1 யோவான் 3:10). எல்லா வசதிகளையுடைய ஒரு விசுவாசி, ஏழ்மையான, தேவையிலிருக்கும் இன்னொரு விசுவாசியை பார்க்கும்போது, அனைத்து வசதிகளையுடைய சகோதரன், வறுமையிலிருக்கும் சகோதரனுக்கு உதவாமலிருந்தால் அவன் இருதயத்தில் தேவ அன்பு இல்லை. நம்முடைய அன்பு பேச்சிலும், வார்த்தையிலும் மட்டும் இருக்கக்கூடாது. நம் அன்பு செய்கைகளில் வெளிப்பட வேண்டும். **இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்** (யாக்கோபு 2:13). **இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்** (ரோமர் 12:8).

கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கு ஏற்ற கூலியை துன்மார்க்கன் கொடுக்கமாட்டான். மாடுகள் போரடிக்கும்போது, வைக்கோலை தின்று

கொண்டேயிருக்கும். அந்த போரடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாயாக என்று உபாகமம் 25:4 கூறுகிறது. மிருகத்தை பட்டினியோடு வேலைசெய்ய வைக்கக்கூடாது. உங்களுக்காக வேலை செய்து கொடுப்பவர்களுக்கு மனமுவந்து தாராள மனதுடன் வேலைக்கேற்ற கூலியை கொடுக்க வேண்டும். கஞ்சத்தனம் பண்ணக்கூடாது. சிலருக்கு மற்றவர்களுக்கு பணத்தை கொடுக்க மனதே வராது. வேதத்தை பகுத்து போதிக்கிறவர்களை இரட்டிப்பாக கனப்படுத்த வேண்டும் (1 தீமோத்தேயு 5:17).

**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும். அவைகளையும் விடாதிருக்க வேண்டும்** (மத்தேயு 23:23). வேதபாரகரும், பரிசேயரும் வெளியே, நல்லவர்கள்போல நடித்துக் கொண்டிருந்தனர். தேவனுடைய கட்டளைகளில் முக்கியமானவற்றை பின்பற்றவில்லை. நியாயமாகவும், இரக்கமாகவும், நேர்மையாகவும் இருப்பதில்லை. அவர்களை இயேசு கிறிஸ்து, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பிடுகிறார். கல்லறையின் வெளிப்புறம் சுத்தமாக இருக்கும். ஆனால், உள்ளே முழுவதும் இறந்தவர்களின் எலும்புகளினாலும், சகல அசுத்தங்களினாலும் நிறைந்திருக்கும். அதுபோல அவர்களது இருதயம் மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும், கொள்ளையினாலும் நிறைந்திருக்கும்.

தேவநீதி நம்மில் வெளிப்பட வேண்டும். நாமாக நம்முடைய பார்வையில் நேர்மையானதைச் செய்யாமல், கர்த்தருடைய வார்த்தையின்படி அவருடைய பார்வையில் சரியானவற்றைச் செய்ய வேண்டும். சுயநீதி என்பது நம்முடைய பார்வையில், நமக்கு சரியாக தோன்றுகிறபடி எல்லாவற்றையும் செய்வது. சுயநீதி, தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையைப்போல இருக்கிறது. **அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியாமல் தேவநீதிக்கு கீழ்ப்படியாதிருக்கிறார்கள்** (ரோமர் 10:3). இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிற அநேக சபை ஊழியர்களும், சபைத்தலைவர்களும் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராக இருந்து தங்களோடுகூட அநேகரை நரகத்திற்கு இழுத்துச் செல்கின்றனர். இவர்கள் பாரம்பரியத்தையும், சடங்காச்சாரத்தையும் பின்பற்றுகிறார்கள். முழு இருதயத்தோடு ஆண்டவரை ஆராதிக்காமல் சடங்காச்சாரமாக ஆராதிப்பார்கள். மேலும் ஜாதி, நாள், நேரம் பார்த்து திருமணம் செய்வார்கள்.

பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் (மத்தேயு 9:13). கர்த்தருக்கு எவ்வளவு காணிக்கை கொடுத்தாலும் இருதயத்தில் இரக்கமில்லாமல் கொடுத்து தேவனை கவர முயல்வது வீண். உள்ளத்தில் இரக்கமுள்ளவர்களாய் இருந்து கொடுக்கும் காணிக்கையை கர்த்தர் விரும்புகிறார். **நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்** (மீகா 6:8). கர்த்தர் மேலுள்ள அன்பினால் நிறைந்து, இருதயத்தில் உணர்ந்து கொடுக்கும் காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கிறார்.

துன்மார்க்கனுடைய பலி அருவருப்பானது. அதைத் துர்ச்சிந்தையோடே



செலுத்தினாலோ எத்தனை அதிகமாய் அருவருக்கப்படும் (நீதிமொழிகள் 21:27). துன்மார்க்கனுடைய காணிக்கையை கர்த்தர் வெறுத்து அருவருக்கிறார். பாவத்தோடுகூட கொடுக்கும் காணிக்கையை அங்கீகரிக்கமாட்டார். மனந்திரும்பி அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு பிரியமாக இருப்பவர்களின் காணிக்கையில் கர்த்தர் மகிழ்ச்சியடைகிறார். துன்மார்க்கன் கர்த்தரை நேசிக்காமல், தங்களது பயனற்ற விக்கிரகங்களையே (பணம், பொருள், பதவி, நகை, மனிதர்கள்) நேசிப்பதால், கர்த்தர் அவர்களது காணிக்கையை வெறுக்கிறார். அவர்கள் கர்த்தரது வழியை அல்ல. தங்கள் சொந்த வழியையே தெரிந்தெடுப்பார்கள். **துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது; நீதியைப் பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார்** (நீதிமொழிகள் 15:9). **துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப் போடுகிறார்** (சங்கீதம் 146:9). உண்மையாய் கர்த்தரை நேசிப்பவர்கள், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய வழியில் நடப்பார்கள். தன் மனது விரும்புகிறதைச் செய்து கர்த்தரை மகிழ்ச்சியடையச் செய்வார்கள்.

அநேகர், தங்கள் சுயவிருப்பத்தின்படி நடந்துகொண்டு, கர்த்தரைப் பிரியப்படுத்த முயற்சிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், அவரோடு ஐக்கியமில்லாமல் ஆலயத்திற்குச் செல்கிறார்கள். காணிக்கை, தசமபாகம் கொடுக்கிறார்கள். இது பயனற்றவை. தேவன்மேல் உள்ள அன்பினால், பக்தியினால் கொடுப்பதில்லை. சடங்காச்சாரமாக கொடுக்கும் காணிக்கையைவிட, தேவனை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிந்து நடப்பதையே விரும்புகிறார். **பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்கு பிரியம்** (நீதிமொழிகள் 21:3). தேவன் விரும்புகிற ஒரு வாழ்க்கையை நாம் வாழவேண்டும். நம் வாழ்க்கையில் செய்யும் எல்லாக் காரியங்களிலும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். சடங்காச்சாரமாய் கொடுக்கும் காணிக்கையினால் நமக்கு ஒரு ஆசீர்வாதமும் கிடைக்காது. நம் பணத்தையோ, நம் ஆற்றலையோ, நம் நேரத்தையோ அவர் கேட்கவில்லை. நம் இருதயத்தையே அவர் கேட்கிறார். நாம் அவரை முழு இருதயத்தோடு நேசித்து, அவரை தொழுது கொள்ள வாஞ்சிக்கிறார். நாம் மனிதர்களுக்கு வெகுமதிகளையும், பணத்தையும், பொருட்களையும் கொடுத்து, அவர்களை பிரியப்படுத்தலாம். **அந்தரங்கமாய் கொடுக்கப்பட்ட வெகுமதி கோபத்தை தணிக்கும்; மடியிலுள்ள பரிதானம் குரோதத்தை ஆற்றும்** (நீதிமொழிகள் 21:14). நம் தவறுகளை மறைக்க, கர்த்தருக்கு நிறைய காணிக்கை கொடுத்து அவரை பிரியப்படுத்த முடியாது.

கர்த்தர் சவுலிடம், அமலேக்கியரிடம் போரிட்டு, அவர்களையும், அவர்களுடைய உடைமைகளையும் முழுவதுமாக அழித்துவிடும்படி கூறினார். சவுல் அமலேக்கியரை தோற்கடித்து, அந்த ராஜாவை உயிரோடு பிடித்தான். எல்லாவற்றையும் அழிக்க விருப்பமில்லாமல் ஆடு மாடுகளில் முதல் தரமானவற்றையும், சிறந்த பொருட்களையும் அழிக்காமல் வைத்துக் கொண்டான். கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான். அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாததால், கர்த்தர் அவனை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். சாமுவேல் தீர்க்கதரிசியிடம் கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்று கூறினான். கர்த்தருக்கு பலியிடுவதற்கு ஆடு மாடுகளை ஜனங்கள் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்று சொல்லி ஜனங்கள் மேல் பழியைப் போட்டான். அதற்குச் சாமுவேல்

**கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிற தைப் பார்க்கிலும், சர்வாங்க தகனபலி களும் கர்த்தருக்கு பிரியமாய் இருக் குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத் தலும் உத்தமம்** (1 சாமுவேல் 15:22). இரண்டகம் (அடங்காமை) பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் (தனது திட்டங்களை அல்லது முடிவுகளை மாற்றிக் கொள்ள மறுக்கிற பிடிவாதகுணம்) அவபக்திக்கும், விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக் கிறது. அவன் கர்த்தருடைய வார்த் தையை புறக்கணித்தபடியினாலே கர்த்தர் அவனை ராஜாவாயிராதபடிக்கு புறக் கணித்து தள்ளினார். நம்மில் அநேகர் நாம் செய்வது சரிதான் என்று முழுமையாக கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறோம். அப்படி முழுமையாக கீழ்ப்படியாமல் இருந்தோமென்றால் இன்றே மனந்திரும்பு வோம். துன்மார்க்கரின் சுபாவங்கள் நமக்குள் வராதபடி காத்துக்கொள்வோம்.

**கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக் கிற மனுஷன் பாக்கியவான்** (சங்கீதம் 112:1). கர்த்தர் அவர்களுக்கு கனத்தையும், செல்வ செழிப்பையும், பாதுகாப்பையும், பயத்திலிருந்து விடுதலையையும் தருவார். அவர்கள் இரக்கமுள்ளவர்களாய், நீதியும் நியாயமு முள்ளவர்களாய் இருப்பார்கள். **வாரி யிறைத்தான், ஏழைகளுக்கு கொடுத் தான், அவனுடைய நீதி என்றென் றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். துன் மார்க்கன் அதைக்கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக் கரைந்து போவான்; துன்மார்க்கருடைய ஆசை அழியும்** (சங்கீதம் 112:9,10). கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் ஏழைகளுக்கும் தேவையில் இருப்பவர்களுக்கும் தாராள மனப்பான்மையோடு உதவி செய்வார் கள். அவர்கள் மற்றவர்களைவிட உயர்ந்த நிலையில் இருப்பார்கள். துன்மார்க்கன் இதைப்பார்த்து கோபமும், பொறாமையும்படுவார்கள். துன்மார்க்கனுக்கு எல்லா வசதிகளும் இருந்தாலும் நிம்மதியுடன் இருக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் பணத்தை நம்பி வாழ்வார்கள். அவர்கள் விரும்புவதை அவர்கள் பெறுவதில்லை. துன்மார்க்கன் தன் ஆசைகளை நிறைவேற்ற மற்றவர்களி டம் நேர்மையற்ற முறையில் நடந்து, பணம், பொருட்கள், சொத்துக்களை சேர்ப்பார்கள். நாம் தாராள மனப்பான்மை உள்ளவர்களாய் இருந்தால், நேர்மையற்ற குணம் நம்மைவிட்டு போய்விடும். மற்றவர்களுக்கு கொடுப்பதால், பணத்தை இழந்து விடுவோமோ என்று பயப்படுவது அவர்களுக்கு கண்ணியாயிருக்கிறது. தாராள மனத்தோடு, தேவனை உயர்வாக எண்ணி கனப்படுத்தும்போது, நமது நம்பிக்கை தேவன் மேலிருக்கும். பணத்தின் மேலிருக்காது.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத், கர்த்தரை தன் முழு இருதயத்தோடு தேடினான். கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங் கொண்டது (2 நாளாகமம் 17:6). கர்த்தருடைய வேதத்தை ஜனங்களுக்கு போதிக்க தேசமெங்கும் ஆசாரியர்களை ஏற்படுத்தி னான். அவன் கர்த்தருடைய வழியில் நடந்து கொண்டதுமல்லாமல், ஜனங்க ளும் அப்படியாக நடக்க வாஞ்சித்தான். ஜனங்களை கர்த்தரிடத்திற்கு திரும்பப் பண்ணினான். அவன் தன் தேசத்திலுள்ள பட்டணங்களிலெல்லாம் நியாயாதிபதி களை வைத்து, அவர்களிடம் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்க வேண்டும் என்றும் நமது தேவன் நியாயமானவர், அநீதியானவற்றை யாருக்கும் செய்யமாட்டார்; பணத்தை பெற்றுக் கொண்டு நியாயத்தீர்ப்புகளை மாற்றிக் கொள்ளமாட்டார் என்றும் கூறினான். அவன் விக்கிரகங்களை வணங்காமல் தேவனைப் பின்பற்றினான். கர்த்தர் யோசபாத்தோடிருந்தார். அவன் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்ததால், கர்த்தர் அவனை யூதாவின் பலமிக்க ராஜாவாக உயர்த்தினார்.

யோசபாத், கர்த்தருக்கு விரோதமாக இருந்த இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு சம்மந்தம் கலந்தான். ஆகாப் துன்மார்க்கனாய் வாழ்ந்தான். கர்த்தரு டைய பார்வையில் பொல்லாத காரியங் களை செய்து வந்தான். யோசபாத் தனது மகனான யோராமுக்கு ஆகாபின் குமாரத்தி யாகிய அத்தாலியாளை திருமணம் செய்து வைத்தான். யோசபாத்தின் மகன் யோராம் ராஜாவாயிருந்தபோது, கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய் தான். ஏனென்றால், அவனது மனைவி விக்கிரகங்களை வழிபடுகிறவளாயிருந் தாள். அவன் தகப்பனாகிய யோசபாத்தின் வழியில் நடவாமல், தனது மாமனார் ஆகாபின் வழியில் நடந்தான். அவன் தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டபடியால், கர்த்தர் அவனுக்கு எதிராக எதிரிகளை தோன்றபண்ணினார். ஜனங்களை கர்த்தரை விட்டு வழிவிலகச் செய்தான். கர்த்தர் எச்சரிக்கை கொடுத்தும் அவன் மனந்திரும்பாததால், கர்த்தர் அவனுக்கு தீராத குடல்நோய் வரும்படி செய்தார். அவன் வேதனையோடு செத்துப்போனான். அவனது மகன் அகசியா ராஜாவானான். அவனும் ஆகாப் குடும்பத்தாரின் வழிகளில் நடந்தான்; **துன்மார்க்கமாய் நடக்க, அவனுடைய தாய் (அத்தாலியாள்) அவனுக்கு ஆலோசனைக்காரியாயிருந்தாள்** (2 நாளாகமம் 22:3). அகசியாவும், கர்த்த ருக்கு பிரியமான வழிகளில் நடக்க வில்லை. அவன் தகப்பன் மரித்தபின், ஆகாபின் குடும்பத்தினர் அவனுக்கு தீய அறிவுரைகளை கூறிவந்தனர். அவனது தாய் அத்தாலியாள், அவளது தாய் யேசபேலைப் போலவே பொல்லாத ஸ்திரீயாக இருந்தாள். **துன்மார்க்க னுடைய ஆலோசனையின்படி நடவாதே** என்று சங்கீதம் 1:1 கூறுகிறது. அவர்கள் கூறிய ஆலோசனை அவனை அழிக்கு நேராக வழிநடத்தியது. இவன் தவறு செய்ய அவன் தாயே தூண்டி னாள். ஆகாபின் குடும்பத்தினர் தந்த அறிவுரையே அவனது மரணத்திற்கு ஏதுவாயிற்று. அகசியா மரித்தபின், அவனது தாய், குடும்பத்திலுள்ள ராஜ வம்சமான யாவரையும் கொன்றுபோட் டாள். பதவிக்காக தனது பேரன்களையே கொலை செய்தாள். அகசியாவின் ஒரு மகன்மட்டும் காப்பாற்றப்பட்டான்.

பாருங்கள், கர்த்தருக்கு பயந்து அவருடைய கற்பனைகளின்படி நடந்த யோசபாத் ராஜா, துன்மார்க்கமாய் வாழ்ந்த ஆகாபோடு சம்மந்தம் கலந்ததால், அவனது சந்ததியினரும் கர்த்தரைவிட்டு வழிவிலக ஏதுவாயிற்று. சந்ததியினரும் அழிந்து போனார்கள். யூதா தேசம் விழுந்துபோக இந்த யோராம் அத்தாலியா ளின் திருமணம் காரணமாயிருந்தது. அத்தாலியாள் மூலம் பல தெய்வங்களை வழிபடுகிற பழக்கம் தேசத்திற்குள் வந்தது. தேவனை மறக்கச் செய்து பாகாலை வழிபட வைத்தார்கள். யோராம் கர்த்தரு டைய வார்த்தையை புறக்கணித்ததுபோல நாம் புறக்கணிக்காமல் அதன்படி நடக்க கவனமாயிருக்கவேண்டும். நமக்கு யார்



ஆலோசனை கூறினாலும் அகசியா துன்மார்க்கரின் ஆலோசனையின்படி நடந்ததுபோல நடக்காமல், தேவவார்த்தையின்படி இருக்கிறதா என்பதை பரிசோதித்து நல்லவற்றையே எடுத்துக்கொள்ளவேண்டும். துன்மார்க்கரின் முடிவோ அழிவு. தனது தாயின் முடிவைப்போலவே அத்தாலியாளின் முடிவும் இருந்தது. **இரட்சிப்பு துன்மார்க்கனுக்குத் தூரமாயிருக்கிறது; அவர்கள் உமது பிரமாணங்ககளைத் தேடார்கள்** (சங் *119:155*).

நாம் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும்போது கர்த்தரிடம் கேட்காமல், நம் சுயவிருப்பப்படி, காரியங்களில் ஈடுபடுகிறோம். பொல்லாத ஜனங்களோடு சேரும்போது, நமக்கு நாமே அழிவை வருவித்துக் கொள்கிறோம். கர்த்தரிடமிருந்து வரும் பல நன்மைகளை இழந்து போகிறோம். தேவ மனிதர்கள் மூலமாக கர்த்தரிடமிருந்து வரும் எச்சரிக்கைகளை அசட்டை பண்ணி, அற்பமாக எண்ணி, எச்சரிக்கை கொடுத்த தேவமனிதர்களை பகைக்கிறோமா? மனந்திரும்பி, நம்மை தாழ்த்தி கர்த்தர் தரும் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோம்.

**அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும், அநீதிக்கும் சம்மந்தமேது? ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்கேது?** (2 கொரிந்தியர் *6:14,15*) எப்படி கிறிஸ்துவும் சாத்தானும் உடன்பட்டு கொள்ள முடியும். அவிசுவாசியுடன் விசுவாசிகள் சேர்ந்து இருக்க முடியாது. அதனால் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாமல் காத்துக் கொள்வோம். தொழில் செய்யும் போதும் அவிசுவாசிகளை பங்காளராக சேர்க்காதிருப்போம். வேத வசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களை விட்டுவிலக வேண்டும் (2 தெசலோனிக் கேயர் *3:14*).

### துன்மார்க்கனாய் நடந்த ஏலியின் குமாரர்

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறிந்து கொள்ளவில்லை (1 சாமுவேல் *2:12*). ஆசாரியனாகிய ஏலியின் மகன்கள் தேவாலயத்தில் பணிவிடை செய்தார்கள். அவர்கள் ஆசாரியர்களாக இருந்தும், கர்த்தருக்கு பயப்படும் பயம் அவர்களிடத்தில் இல்லை. துணிகரமாக பாவத்தில் ஈடுபட்டனர். ஜனங்கள் தேவனுக்கு பலி செலுத்த வரும்போது, இறைச்சியை பலவந்தமாய் கேட்டு வாங்கினார்கள். ஆலயத்திற்கு வரும் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டார்கள். கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலம் எச்சரிக்கை கொடுத்தும் எச்சரிப்பை கேட்காமல் தொடர்ந்து பாவத்தில் வாழ்ந்தனர். துன்மார்க்கமாய் நடந்த ஏலியின் குமாரர்கள் யுத்தத்தில் இறந்து போனார்கள். நம்முடைய வாழ்க்கையில் நாம் எப்படியாக இருக்கிறோம்? இப்பாவங்களுக்கு விலக்கி நம்மை பாதுகாத்துக் கொள்வோம்.

**பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான். தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே** (1 யோவான் *3:12*). கர்த்தர் ஆபேலின் காணிக்கையை ஏற்றுக் கொண்டு, காயீனின் காணிக்கையை ஏற்றுக் கொள்ளாததால், காயீன், ஆபேலின் மேல் கோபமும், பொறாமையும் கொண்டு அவனைக் கொன்று போட்டான். நாம் காயீனைப்போல பொல்லாதவனாக இருக்கக்கூடாது. கர்த்தர் அவனை





எச்சரித்தும் அவன் கீழ்ப்படியவில்லை. ஆபேல் நீதிமானாயிருந்தான். அநீதியாய் நடப்பவர்கள் நீதிமான்களைப் பார்க்கும் போது, நாம் அப்படி இல்லையே என்று பொறாமைப்படுவார்கள். நாம் கர்த்தருக்காக வாழும்போது, உலகத்தார் நம்மை பகைப்பார்கள். **என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்** (1 யோவான் *3:15*). உலகத்தாரிடமுள்ள நேர்மையற்ற காரியங்களை, தவறுகளை உணர்த்தி காண்பிக்கும்போது, பகைப்பார்கள்.

ஆகாப், கர்த்தருக்கு விரோதமாக பொல்லாத வழியில் நடந்த போதும் கர்த்தருடைய தீர்க்கத் தரிசியாகிய எலியா மூலம் கர்த்தருடைய வார்த்தை வந்தபோது, தன்னை தாழ்த்தி இரட்டுடுத்தி உபவாசம் பண்ணினான் (1 இராஜாக்கள் *21:27-29*). அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு பயந்து மனந்திரும்பியபோது, அவன் காலத்தில் வரவிருந்த தண்டனையை கர்த்தர் தள்ளிப் போட்டார். துன்மார்க்கமாய் வாழ்ந்திருந்தாலும், மனந்திரும்பி கர்த்தரண்டை வரும்போது, கர்த்தர் தமது பிள்ளைகளாக மாற்றிவிடுகிறார்.


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-
**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**
ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா





ஜெப தேவைக்கும்,
தேவ ஆலோசனைக்கும்

+ 91 - 44 - 22353500
+ 91 - 9940667881

www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com



# உங்கள் விசுவாசம் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும் 2

பெல்ராஜ் சென்னை



நம் கையில் இருக்கும் பரிசுத்த வேதாகமத்தில், நம்முடைய கடந்த காலமும், நிகழ் காலமும், எதிர்காலமும் உள்ளது. நம்முடைய சுய அறிவைக் கொண்டு, பரம ஞானத்தினால், தேவ ஆவியினால் எழுதப்பட்ட அந்த வார்த்தைகளை நாம் பரிபூரணமாய் அறிந்துகொள்ளவோ, புரிந்து கொள்ளவோ முடியாது. ஆனால் நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரால் அவற்றையெல்லாம் விளக்கிச் சொல்லமுடியும். தேவனுடைய சித்தம் இந்த வேதாகமத்தின் வார்த்தைகள்தான். இரவும் பகலும் நாம் வேதத்தைத் தியானிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நமக்கு எல்லாவற்றையும் போதிப்பார். நம்முடைய வாழ்க்கையில் இப்பொழுதுள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலை எதனால் வந்தது? ஏன் வந்தது? எதற்காக வந்தது? இந்த சூழ்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும்? இப்படி எல்லாக் காரியங்களையும் பரிசுத்த ஆவியானவர், நமக்கு வேதத்திலிருந்து எடுத்துச் சொல்லி, நம்மை வழிநடத்துவார்.

தேவனுடைய சித்தத்தின்படி, நடப்பது நமக்கு சமாதானத்தைத் தருவதாக இருக்கும். நம்முடைய சித்தத்தின்படி நாம் நடந்தோமென்றால் அது சமாதானத்தைத் தராது. நாம், எவ்வளவோ மனிதர்களுடைய வார்த்தைகளைக் கேட்கலாம். ஞானிகளுடைய வார்த்தைகளைக் கேட்கலாம், படிக்கலாம். ஆனால், அவைகளெல்லாம் நமக்கு சமாதானத்தைத் தராது. அந்த வார்த்தைகளெல்லாம் நம்முடைய மனதினுள் போகும். ஆனால், மனதைக் கடந்து எந்த இருதயத்தினுள் சமாதானம் வேண்டுமோ அந்த இருதயத்தினுள் போகாது. நம் இருதயத்திற்குள் செல்லக் கூடிய ஒன்றே ஒன்று ஆண்டவருடைய வார்த்தை மட்டுமே.

**''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.''** (எபிரெயர் 4:12).

ஆண்டவருடைய வார்த்தை மட்டுமே நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஊடுருவிச் சென்று சுகத்தைத் தரமுடியும். அதனால் ஆண்டவர் சொல்லுகிறார், **''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்''** என்று.

இந்த வார்த்தை எப்படி நம்முடைய அன்றாடத் தேவைகளை சந்திக்க உதவும்? இந்த பூமியில் வாழ்கின்ற நாம் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து எதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றாலும் அதற்கு 'விசுவாசம்' வேண்டும். நம்முடைய அறிவிற்கும், ஞானத்திற்கும், விஞ்ஞானத்திற்கும், தத்துவத்திற்கும், மன இயலுக்கும் அப்பாற்பட்டது இந்த விசுவாசம். இந்த விசுவாசத்தை நாம் தேவனுடைய வார்த்தை மூலமாகத்தான் பெற்றுக்கொள்ள முடியும்.

**''..விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''** (ரோமர் 10:17).

தேவனுடைய வார்த்தையை கேட்கக் கேட்க நமக்கு விசுவாசம் வரும். விசுவாசம் என்றால் என்ன?

**''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது''** (எபிரெயர் 11:1).

நம் கண்களால் காணாதவைகளை, நம் அறிவுக்கு எட்டாததை நம்புவது தான் விசுவாசம்.

**''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிற வரென்றும் விசுவாசிக்க வேண்டும்''** (எபிரெயர் 11:6).

இன்றும் தேவன் ஜீவிக்கிறார் என்றும், தம்மிடம் வருகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறார் என்றும் நாம் முழு நிச்சயமாய் நம்புவதே விசுவாசம்.

தேவன் மாம்சத்திலே இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமியிலே சஞ்சரித்தபோது, தம்மிடம் சுகம் வேண்டி, அற்புதம் வேண்டி வந்தவர்களிடமெல்லாம், ''விசுவாசிக்கிறாயா?'' என்றுதான் முதலில் கேட்கிறார். ஆம், விசுவாசிக்கிறேன் என்று சொன்னவர்களிடம் அவர் சொன்னது, ''நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது'' என்பதுதான். அப்படி சொன்னவர்கள் வாழ்க்கையில் அற்புதங்கள் நடந்தன.

பணத்தின்மீதோ, மனிதர்கள் மீதோ, வேலையின்மீதோ, நம்முடைய தாலந்துகள்மீதோ நாம் நம்பிக்கை வைக்காமல், காணாத தேவனை விசுவாசிப்பதையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் கர்த்தரை நாம் விசுவாசிப்போமென்றால், நிச்சயம் நமக்கு விடுதலை தருவார்.

ஆபிரகாமுக்கு 75 வயதாகின்றது. அவனுடைய சரீரம் ஒரு குழந்தையை பெற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. எல்லாவற்றையும் கடந்த நிலை. அப்பொழுது கர்த்தர் அவனிடம், வானத்து நட்சத்திரங்களைப் போல உன் சந்ததி இருக்கும்; எண்ண முடியாத அளவுக்கு என்று சொல்லுகிறார் (ஆதியாகமம் 15:5 ).

ஆபிரகாம், தனக்கு அந்த எழுபத்தைந்து வயதுவரை ஒரு குழந்தைகூட இல்லை என்பதை பார்க்கவில்லை. சரீரம் செத்துப்போய் விட்டது என்பதை நினைக்கவில்லை. தன்னுடைய மனைவி சாராளின் கர்ப்பம் செத்துப்போனதையும்

எண்ணவில்லை. தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பினான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:22, ஆதியாகமம் 15:6). அது அவனுக்காக மாத்திரம் அல்ல. நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. ஆம் இந்த விசுவாசம்தான் 'அவருடைய ராஜ்யத்தின் நீதி'.

எனவே நாம் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டு அவருடைய சித்தத்தை செய்து, அவருடைய நீதியாகிய விசுவாசத்தோடு காணப்படுவோம். அப்பொழுது நம்முடைய உண்பதற்கான, குடிப்பதற்கான, உடுப்பதற்கான எல்லாவற்றையும் கூடுதலாகப் பெற்றுக்கொள்வோம்.

அப்போஸ்தலனாகிய பேதுருவைப் பாருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பேதுருவைப் பார்த்து இப்படியாகச் சொல்லுகிறார்:

''சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்.

நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து'' (லூக்கா 22:31,32).

நாம் விசுவாசிக்கிறவர்களாக இருக்கும்போதும் ஏன் நமக்கு இந்த போராட்டம் என்பவர்களுக்கான பதில் இது. நம்முடைய விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு நம்முடைய பிரதான ஆசாரியர் நமக்காகப் பரிந்து பேசுபவராக, ஜெபிப்பவராக இருக்கிறார். கஷ்டத்தின் மத்தியில்தான் விசுவாசம் வளரும். அதே பேதுரு பல போராட்டங்களைக் கடந்தபின்பு தன்னுடைய விசுவாச அனுபவத்தை இப்படியாகக் கூறுகிறார்:

''அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும்'' (1 பேதுரு 1:7).

ஆகவே, இப்பொழுது உங்களுக்குள்ளே போராட்டம், உங்கள் விசுவாசத்தை சோதித்துப் பார்க்கவே.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கேளுங்களேன்: ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்'' (1 தீமோத்தேயு 4:7).

அதே பவுலும், பர்னபாவும் சீஷர்களிடத்தில் இப்படியாகக் கூறுகிறார்கள்:

''சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்'' (அப்போஸ்தலர் 14:22).

இந்த போராட்டங்கள், உபத்திரவங்கள் நம்மை ஆண்டவரிடம் இன்னுமாக



நெருங்க வைக்கிறது. ஆம், எனக்குப் பிரியமானவர்களே, நம்மை நம்பாமல், மற்ற மனுஷர்களை நம்பாமல், சூழ்நிலைகளை நம்பாமல், கர்த்தரையே விசுவாசிக்க ஆரம்பிக்கிறோம். கர்த்தரையேத்தான் நான் விசுவாசிக்கிறேன், பின்னும் எனக்கு ஏன் இந்த விசுவாச பரிட்சை என்று கேட்கிறீர்களா? இதோ, அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொல்கிறார்:

''என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது'' (யாக்கோபு 1:2-4).

பாருங்கள், நமக்கு பொறுமையைத் தருவது இந்த விசுவாசத்தின் பரீட்சையே. பல வேளைகளில் நமக்கு பொறுமை மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. கர்த்தரின் சித்தம், கர்த்தருடைய வேளையோடு இணைந்தது.

நம் ஆண்டவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் (பிரசங்கி 3:11). எனவே, அவரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள, முதலாவது ஆண்டவர் நம்மை தகுதிப்படுத்துகிறார். பின்னர் அந்த ஆசீர்வாதத்தைத் தருகிறார். அவருடைய அந்த வேளைக்கு நாம் காத்திருக்கவேண்டும். அப்படிக் காத்திருக்க பொறுமை மிக அவசியம். ஆண்டவர் அந்தப் பொறுமையை நமக்குத் தந்து நம்மை தகுதிப்படுத்துவதற்காக சந்தோஷப்படுங்கள்.

''நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே'' (எரேமியா 29:11).

நம்முடைய எதிர்பார்ப்பை, தேவையை நாம் அவரிடம் கேட்பதற்குமுன்னமே அவர் அறிந்து வைத்திருக்கிறார். அதைக் கொடுப்பதற்கு அதற்கேற்ற விசுவாசம் நமக்குவேண்டும். ஆகவே, முதலில் நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுகிறார். பின்னர் அந்த விசுவாசத்தின்படி நமக்குத் தருவார்.

''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்'' (பிலிப்பியர் 4:6,7).

கர்த்தாராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென்!